[24th January 1961

SRI A. VEDARATHNAM : இவர்கள் உதவி கோரி ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் உதவி கோரியதாக தகவல் ஒன்றும் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கேட்பவர்களுக்குக்கெல்லாம் பிரஜா உரிமை தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அந்த இடத்தில் "சிடிசன்ஷிப்" கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அது குறித்து இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவலில்லை.

Strike

* 127 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் குந்தாப் பகுதியில் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக சிறைத் தண்டனை பெற்ற ஊழியர்கள் எவ்வளவு பேர் ?

(இ) அவர்களுக்குச் சிறைத் தண்டனை முடிந்தபின் மீண்டும் வேலையளிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Sixty-nine persons were convicted and sentenced to various terms of imprisonment.

(*b*) The question is under the consideration of Government.

Office hours

* 128 *Q.*—SRI N. K. PALANISAMI and SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the working hours of the offices as 11 a.m. to 5-30 p.m. instead of 10-30 a.m. to 5 p.m. ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : சென்னை செகரட்டேரியட் என்.ஜி.ஓ. சங்கம், மாகாண என்.ஜி.ஓ.-க்கள் சங்கம் இவை நான்கைந்து மாதங்களுக்கு முன்பாக இம்மாதிரி 10½ மணி என்பதற்கு பதிலாக 11 மணியிலிருந்து 5½ மணிவரை என்று வேலை செய்யும் நேரத்தை மாற்றவேண்டுமென்று சொன்னதற்கு,